**முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், அரியலூர்**

வா.சா.1– இளமதி OS.No.17/2022 நாள் :07.04.2025

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் 1993 ஆம் ஆண்டு பிறந்தேன். எனது அம்மா உயிருடன் உள்ளார். நானும் என் அம்மாவும் ஒற்றுமையாக இருக்கிறோமா என்றால் ஆமாம். என் அப்பா மெட்ராசில் சர்வேயராக வேலை செய்தார். 2007 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். என் பாட்டியின் பெயர் அஞ்சலை. என் பாட்டி நடராஜன் மீது வழக்கு போட்டாரா என்றால் எனக்கு தெரிந்து அவ்வாறு எதுவும் இல்லை. 1992லேயே அவ்வாறு வழக்கு இருந்ததாக பிரதிவாதிகள் சொன்னால் நான் அதுபற்றி வழக்கறிஞர் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. என் அப்பாவிற்கு இரண்டு மனைவிகள். என் அம்மா முதல் மனைவி, என் சித்தி இரண்டாவது மனைவி. என் அம்மாவிற்கு முன்பாக என் அப்பாவிற்கு வேறு யாராவது மனைவி இருந்தாரா என்று எனக்கு தெரியாது. என் அம்மா என் அப்பா மீது புகார் கொடுத்தாரா என்றால் ஆமாம். நான் அதனை பார்த்திருக்கிறேன். அரியலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு 2011ல் என் அம்மா புகார் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அதில் என் அம்மா அவர் நடராஜனின் இரண்டாவது மனைவி என்றும் தனலெட்சுமி என்பவர் அவரது முதல் மனைவி என்றும் சொல்லியிருக்கிறாரா என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் என் தாயாரை விசாரிக்கபோகிறேனா என்றால் இல்லை. நடராஜனுக்கு சேகர் என்ற ஒரு மகன் உண்டா என்றால் இல்லை. என் அம்மா நடராஜனின் இரண்டாவது மனைவி என்றாலும் முதல் மனைவி உயிருடன் இருந்தபோதே நடராஜன் என் அம்மாவை திருமணம் செய்து கொண்டார் என்றாலும் சரியல்ல. பாகம் குறித்து அவர்களுக்கிடையே 1992 லேயே ஒரு வழக்கு நடந்து முடிந்துவிட்டது என்றால் அது உண்மையல்ல. சேகர் தான் நடராஜனின் முதல் தாரத்து மகன் என்பதால் அவருக்கும் சொத்தில் பங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்றாலும் நான் அதை இந்த வழக்கிற்காக மறைக்கிறேன் என்றாலும் சரியல்ல. நடராஜன் பூர்வீக சொத்தை எதற்காக கிரையம் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த கிரைய பத்திரத்தில் நகலை நான் வா.சா.ஆ.2

ஆக தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். மைனர்களின் சவரட்சணை செலவுக்காக அந்த சொத்தை என் அப்பா விற்பதாக எழுதியிருக்கிறது என்றால் சரியல்ல. சச்சிதானந்தத்திற்கும் என் அப்பா சொத்துக்களை கிரைய பத்திரம் எழுதிக் கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான். சச்சிதானந்தத்திற்கு என் அப்பா கிரையம் கொடுத்த சொத்தின் கிரைய பத்திரம் என் அப்பா பெயரில் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்து என் அப்பா அவரது வருமானத்தை வைத்து தனிப்பட்ட முறையில் கிரையம் வாங்கிய சொத்து என்றாலும் அதற்கும் பொதுக்குடும்பத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. எனது அம்மா இன்று நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறாரா என்றால் ஆமாம். எனது அம்மாவிற்கு அவர் நடராஜனின் இரண்டாவது மனைவி என்ற விவரம் தெரியும் என்றாலும் அதை மறைத்து என்னை முன் நிறுத்தி அவர் வழக்கு நடத்துகிறார் என்றாலும் சரியல்ல. சச்சிதானந்தத்திற்கு கிரையம் கொடுத்த சொத்து எனது அப்பா நடராஜனின் தனிப்பட்ட சொத்து என்றாலும் அதில் நாங்கள் எந்த கிரையமும் கேட்க முடியாது என்றாலும் சரியல்ல. எனது அம்மாவின் திருமணமே செல்லாது என்பதால் நடராஜனின் சொத்துக்களில் நாங்கள் பங்கு கேட்க முடியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.